RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-105 | 22 ஏப்ரல் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## போதைப் பொருள் வழக்கு: ஜாபர் சாதிக், அவரது சகோதரருக்கு ஐகோர்ட் ஜாமீன்

சென்னை, ஏப்.22

போதைப் பொருள் கடத்தலில், சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக கைது செய்யபட்ட ஜாபர் சாதிக் மற்றும் அவரது சகோதரர் முகமது சலீமுக்கு ஜாமீன் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட திமுக முன்னாள் நிர்வாகியும், திரைப்பட தயாரிப்பாளருமான ஜாபர் சாதிக், சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாகக் கூறி, அமலாக்கத் துறை வழக்குப்பதிவு செய்து, கடந்த 2024ம் ஆண்டு ஜூன் 26ம் தேதி கைது செய்தது. பின்னர் அவரது சகோதரர் முகமது சலீமும் ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டார்.



இந்த வழக்கில் ஜாமீன் கோரி ஜாபர் சாதிக் மற்றும் அவரது சகோதரர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, அமலாக்கத் துறை தரப்பில், ஜாபர் சாதிக் திமுகவின் நிர்வாகியாக இருந்ததால் சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளதால் இருவருக்கும் ஜாமீன் வழங்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அனைத்துதரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், மணிஷ் சிஷோடியா தீர்ப்பை முன் உதராணமாக வைத்து ஜாபர் சாதிக் மற்றும் அவரது சகோதரர் முகமது சலீமுக்கு ஜாமீன் வழங்குவதாக நீதிபதி தெரிவித்தார்.

## “இந்திய தேர்தல் ஆணையம் ‘சமரச’ அமைப்பாகிவிட்டது” அமெரிக்காவில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு

பாஸ்டன், ஏப்.22

இந்திய தேர்தல் ஆணையம் சமரச அமைப்பாகிவிட்டது என்றும் அமைப்பில் மிகப் பெரிய தவறு உள்ளது என்றும் அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, பாஸ்டன் நகரில் இந்தியர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் உரையாற்றினார். அப்போது அவர், சமீபத்தில் நடந்த மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் மோசடி நடந்ததாகவும், அதற்கு தேர்தல் ஆணையம் துணை போனதாகவும் குற்றம் சாட்டினார்.



“மகாராஷ்டிராவில் உள்ள மொத்த மக்களின் எண்ணிக்கையை விட வாக்களித்தவர்களின் எண்ணிக்கை அதிகம். இது ஒரு உண்மை. மாலை 5.30 மணியளவில் தேர்தல் ஆணையம் எங்களுக்குஒருபுள்ளிவிவரத்தை வழங்கியது. அடுத்த இரண்டு மணி நேரத்தில் அதாவது இரவு 7.30 மணியளவில், 65 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். இது உண்மையில் சாத்தியமற்றது. தேர்தல் ஆணையம் சமரசம் செய்யப்பட்டுள்ளது என்பது எங்களுக்கு மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அமைப்பில் ஏதோ மிகப் பெரிய தவறு உள்ளது.” என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவு குறித்துப் பேசிய ராகுல் காந்தி, “அமெரிக்காவுடன் எங்களுக்கு (இந்தியாவுக்கு) ஒரு கூட்டுறவு உள்ளது. நாங்கள் தொடர்ந்து இணைந்து செயல்படுவோம் என்று நம்புகிறோம்.” என்று கூறினார்.

தேர்தல் ஆணையம் மறுப்பு: ராகுல் காந்தியின் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் ஏற்கனவே மறுத்துள்ளது. வாக்காளர் பட்டியல் தேர்தலுக்கு முன்பே திருத்தப்பட்டது என்றும், 18 வயதை எட்டியவர்கள், தங்கள் தொகுதியை மாற்றியவர்கள் ஆகியோரின் பெயர்கள் சேர்க்கப்பட்டு நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது. மேலும், இறந்த வாக்காளர்களின் பெயர்கள் மற்றும் நகல் வாக்காளர்களின் பெயர்களை நீக்கும் நடவடிக்கையும் இதில் அடங்கும் என்றும் அது கூறியுள்ளது.


## தமிழகத்தில் 6 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஏப்.22

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று முதல் 6 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் நேற்று (ஏப்.21) முதல் 26ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்று முதல் 24ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்பு உள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 82 டிகிரி முதல் 99 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் 5 செ.மீ., கோவை மாவட்டம் வால்பாறையில் 4 செ.மீ., நீலகிரி மாவட்டம் உபாசி, கோத்தகிரி, ஈரோடு மாவட்டம் குண்டேரிப்பள்ளம், தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் 3 செ.மீ., நாமக்கல் மாவட்டம் எருமைப்பட்டி, சேந்தமங்கலம், கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை, கோவை மாவட்டம் சின்னக்கல்லார், பெரியநாயக்கன் பாளையத்தில் 2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சூரியசக்தி மின் உற்பத்தியில் இந்திய அளவில் தமிழகம் 4வது இடம்

சென்னை, ஏப்.22

கடந்த 202425ம் ஆண்டில் 10,153.48 மெகாவாட் சூரியசக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து தமிழகம் அகில இந்திய அளவில் தொடர்ந்து 3வது ஆண்டாக 4வது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இதுகுறித்து, மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை வெளியிட்டுள்ள தகவல்: சூரியசக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதில், அகில இந்திய அளவில் மாநிலங்களுக்கு இடையே போட்டி அதிகரித்துள்ளது. அதன்படி, கடந்த 2024 25ம் ஆண்டில் 10,153.48 மெகாவாட் சூரியசக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து தமிழகம் அகில இந்திய அளவில் தொடர்ந்து 3வது ஆண்டாக 4வது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.



இப்பட்டியலில், 28,286.47 மெகாவாட் சூரியசக்தி மின்னுற்பத்தி செய்து குஜராத் மாநிலம் முதலிடத்தையும், மகாராஷ்டிரா மாநிலம் 10,687.27 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து 2வது இடத்தையும் பிடித்துள்ளது.

மத்திய அரசின் சூரியசக்தி மின்திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் முனைப்புக் காட்டி வருகிறது. பிரதம மந்திரி சூரியசக்தி மின்னுற்பத்தி திட்டத்தில், கடந்த ஓராண்டில் 23,500 நுகர்வோர் இணைந்துள்ளனர். இதன் மூலம், 125 மெகாவாட் சூரியசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில்,‘வரும் 2028ம் ஆண்டுக்குள் 3 லட்சம் நுகர்வோரை பிரதம மந்திரி சூரியசக்தி மின்னுற்பத்தி திட்டத்தில் சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது சோலார் பேனல் நிறுவுவதற்காக 850 விற்பனையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது’’ என்றனர்.

## நான்கு நாள் பயணமாக குடும்பத்துடன் இந்தியா வந்த அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ்



புதுடெல்லி, ஏப்.22

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தனது குடும்பத்தினருடன் 4 நாள் பயணமாக இன்று இந்தியா வந்தார். மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் புதுடெல்லி விமான நிலையத்தில் அவர்களை வரவேற்றார்.

துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், அவரது இந்திய வம்சாவளி மனைவி உஷா சிலுகுரி மற்றும் 3 குழந்தைகள் இந்தியா வந்துள்ளனர். விமான நிலையத்தில் ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. மேலும், பரத நாட்டியம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வரவேற்பு அளிக்கப்பட்டது.

டெல்லியில் உள்ள ஐடிசி மவுரியா ஷெரட்டன் ஓட்டலில் ஜே.டி.வான்ஸ் குடும்பத்தினர் தங்குகின்றனர். அவர்களை வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச இருக்கிறார். பிரதமர் நரேந்திர மோடியை, ஜே.டி. வான்ஸ் இன்று மாலை 6.30 மணி அளவில் சந்திக்க இருக்கிறார். டெல்லியில் கல்யாண் மார்க்கில் உள்ள பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற இருக்கிறது. பிரதமர் மோடி இன்று அவர்களுக்கு இரவு விருந்தளிக்கிறார்.

பிரதமர் மோடி உடனான சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பேச்சுவார்த்தையில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் வினய் மோகன் குவாத்ரா ஆகியோர் இடம்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வான்ஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் டெல்லியில் உள்ள அக்ஷர்தாம் கோவிலுக்குச் செல்ல திட்டமிட்டுள்ளனர். இதையடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. “அக்ஷர்தாம் கோயிலில் மேம்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். எங்கள் குழுக்கள் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன. அமெரிக்க துணை அதிபரின் வருகை நிறைவடையும் வரை எங்கள் குழுக்கள் அங்கு இருக்கும்” என்று ஒரு போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்வது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் ஒட்டுமொத்த பாதையை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழகத்தில் சாதிய பாகுபாடு தலைவிரித்தாடுகிறது தமிழிசை சவுந்தரராஜன் குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.22

தமிழகத்தில் சாதிய பாகுபாடு தலைவிரித்தாடுகிறது என்று தமிழிசை சவுந்தரராஜன் குற்றம்சாட்டி உள்ளார். சென்னை தி.நகர் பவர் ஹவுஸ் அருகில் உள்ள காமராஜர் காலனியில் தமிழக பாஜக சார்பில் தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதில், பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தராஜன் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார்.



அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தில் மக்கள் விரோத ஆட்சி நடைபெற்று கொண்டிருக்கிறது. உறையூரில் குடி தண்ணீரில் கழிவு நீர் கலந்து ஒரே பகுதியை சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விஞ்ஞான நூற்றாண்டில் கூட நல்ல குடி தண்ணீரை கொடுப்பதற்கு கூட ஸ்டாலின் அரசால் முடியவில்லை. மக்கள் மீது கவனம் செலுத்தாமல் தேவையில்லாத விஷயங்களில் திமுக அரசு கவனம் செலுத்துகிறது. ஆளுநரை தபால்காரர் என்கிறார்கள். அப்படியென்றால், திமுக எதிர்கட்சியாக இருக்கும் போது, ஆளுநரிடம் ஏன் கோரிக்கைகளை வைத்தார்கள்.

ஏன் ராஜ்பவனை மிதித்தார்கள். எதிர்கட்சியாக இருக்கும் போது அவர்களுக்கு ஆளுநர் தேவைப்படுகிறார். ஆளுங்கட்சியாக இருக்கும் போது தேவையில்லாதவராகிறார். பள்ளிகளுக்கு மாணவர்கள் கத்தியோடு வருகிறார்கள். அறிவாற்றல் நிகழவேண்டிய பள்ளிகளில் அரிவால் நடமாடுகிறது. தமிழகத்தில் சாதிய பாகுபாடு அதிகமாக தலைவிரித்தாடுகிறது. இந்த ஆட்சியில் சமூக நீதியும் இல்லை.

முதல்வர் ஸ்டாலின் மற்ற மாநிலங்களில் இருக்கும் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதை விட தமிழகத்தில் இருக்கும் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கைக்கு பிரதமர் சென்று வந்ததை பற்றி வைகோ கட்சியில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

மதிமுக சிறிய கட்சி. அந்த கட்சிக்குள் நடக்கும் பிரச்சினையையே அவர்களால் பார்க்கமுடியவில்லை. ஆனால், பிரதமர் மோடி இரு நாடுகளுக்கிடையே நடக்கும் பிரச்சினையை சுமூகமாக தீர்த்து வைத்து வருகிறார். முதலில் அவர்கள் தங்கள் கட்சிக்குள் நடக்கும் பிரச்சினையை பார்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆளுநர் ரவியின் நீலகிரி வருகையை கண்டித்து தமிழக காங். கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

சென்னை, ஏப்.22

ஆர்.என்.ரவி கூட்டியிருக்கிற மாநாடு ஒரு சட்டவிரோதமான மாநாடாகும். இதன்மூலம் அரசமைப்புச் சட்டத்தை அவமதித்ததோடு, ஜனநாயகப் படுகொலையை ஆளுநர் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். ஆளுநர் ஆர்.என். ரவியின் சட்டவிரோதப் போக்கை கண்டிக்கிற வகையிலும் நீலகிரி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.கணேஷ் தலைமையில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “தமிழ்நாடு ஆளுநராக பொறுப்பேற்ற ஆர்.என். ரவி கடந்த மூன்றாண்டுகளாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். அரசமைப்புச் சட்டப்படி மாநில அமைச்சரவையின் ஆலோசனையின்படி தான் ஆளுநர் செயல்பட முடியும். ஆனால், அவற்றுக்கு விரோதமாக தமிழ்நாட்டில் உள்ள 16 பல்கலைக் கழங்களில் தன்னை வேந்தராக கருதிக் கொண்டு துணை வேந்தர்களுக்கான தேடுதல் குழுவை அமைத்து, துணை வேந்தர்களை நியமித்து வருகிறார்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழக நிர்வாகத்தையும், அதற்கான முழு நிதிச் சுமையையும் ஏற்று செயல்படுகிற தமிழ்நாடு அரசின் துணை வேந்தர்களை நியமிக்கிற அதிகாரத்தை ஆளுநர் பறித்துக் கொண்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த வழக்கில் கடந்த ஏப்ரல் 8 ஆம் தேதி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அளவிற்கு அற்புதமான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கிறது.

ஆனால், ஆளுநர் ஆர்.என். ரவி, தலைநகர் டெல்லி சென்று, அவரை சந்தித்த பிறகு வருகிற ஏப்ரல் 25, 26, 27 ஆகிய தேதிகளில் துணை வேந்தர்கள் மாநாடு மூன்று நாட்கள் நீலகிரில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெறும் என்று அறிவிப்பு வெளியானதோடு, இதில் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் பங்கேற்பார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், ஆளுநர் ஆர்.என். ரவி ஆகியோர் சட்ட மாமேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் இயற்றிய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டு கூட்டுச் சதியை அரங்கேற்றியிருக்கிறார்கள். இந்த நடவடிக்கை உச்சநீதிமன்ற தீர்ப்பை அப்பட்டமாக அவமதிக்கிற செயலாகும்.

எனவே, உச்ச நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கிற வகையில் வருகிற ஏப்ரல் 25, 26, 27 ஆகிய தேதிகளில் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் மாநாடு நீலகிரியில் நடைபெறுவதை எதிர்த்தும், இம்மாநாட்டை கூட்டுகிற ஆளுநர் ஆர்.என். ரவியின் சட்டவிரோதப் போக்கை கண்டிக்கிற வகையிலும் நீலகிரி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.கணேஷ் தலைமையில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.




அரசு போக்குவரத்து கழகங்களை பாதுகாக்க மாநில கோரிக்கையில் நிதி ஒதுக்குவதுடன் தொழிலாளர்களின் விருப்புரிமை பெற்று அரசு ஊழியர் ஆக்கிட வலியுறுத்தி கன்னியாகுமரி மாவட்ட பாரதிய அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம் சார்பாக ராணி தோட்டம் அரசு போக்குவரத்து கழக பணிமனை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

## ஹெல்மெட் அணியாமல் போலீசார் சென்றால் சஸ்பெண்ட் செய்ய ஆணை




ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனம் ஓட்டும் காவல்துறையினரை சஸ்பெண்ட் செய்ய வேண்டும் ஒழுங்கீனமான காவலர்கள் மீது, துறை ரீதியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கமிஷனர்கள் மற்றும் எஸ்.பி.க்களுக்கு டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவு பிறப்பித்துள்ளார்.




கடலூர் மாவட்டம் அருகே நேற்று காலை நடந்த சாலை விபத்தில் அதிமுக பிரமுகர் உள்ளிட்ட மூன்று பேர் உயிரிழந்தனர். கடலூர் எம்.புதூர் கிராமத்தைச் சேர்ந்த அதிமுக பிரமுகர் நேரு முந்திரி, தோப்பு பணிக்காக மோட்டார் சைக்கிளில் சரண்யா, கல்பனா ஆகியோரை அழைத்துச் சென்ற பொழுது ஜீப் மோதி மூன்று பேரும் பலியாகினர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்ட சட்ட ஆணைக்குழு சார்பாக நடந்த மகா மரம் நடும் விழா மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம் எடப்பள்ளி கிராமத்தில் நடைபெற்றது இதில் குன்னூர் நீதித்துறை நடுவர் அப்துல் சலாம், நீதித்துறை விரைவு நடுவர், உரிமையில் நீதிபதி, குன்னூர் வழக்கறிஞர் சங்க தலைவர், இராமசந்திரன், தாசில்தார், வட்டார வளர்ச்சி அதிகாரி, வழக்கறிஞர்கள் சாய் பிரகாஷ், ரவி, பிரியா மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்..

## கொடைக்கானல் மருத்தவமனையில் விசம் குடித்தாக வந்த நோயாளிக்கு 1/2 நேரத்திற்கு மேலாக அவசர பிரிவில் மருத்துவர் இல்லாததால் பரபரப்பு

கொடைக்கானல், ஏப்.22

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அரசு மருத்துவ மனை இயங்கி வருகிறது.

இந்நிலையில் கொடைக்கானல் அதனை சுற்றி உள்ள மேல் மலை கிராமங்களான மண்ணவனுர், பூம்பாறை, கூக்காள் , மற்றும் 18 மேல் கிராமங்கள் அமைத்துள்ளனர்.

மேலும் கீழ்மலை கிராமங்களான ஆடுக்கம் பெருமாள் மலை வட ,காவுஞ்சி தீறீ செட் , பேத்துப்பாறை அஞ்சு வீடு போன்ற இருவதற்கும் மேற்பட்ட கிராமங்கள் அமைந்துள்ளன




இந்நிலையில் அடுக்கம் பகுதியில் குடும்பத்தகராறில் பெண் ஒருவர் விஷம் அருந்தி உள்ளார் மேலும் பெண்ணின் உறவினர் அவரை காப்பாற்றும் விதமாக 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## JEE தேர்வில் அகில இந்திய அளவில் தரவரிசை பட்டியலில் இடம் பிடித்த பூந்தமல்லி ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவர்கள்

பூந்தமல்லி ஏப்22

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி அருகில் உள்ள கோலப்பஞ்சேரி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில், யிணிணி தேர்வில் அகில இந்திய அளவில் நூற்றுக்கும் குறைவான தரை வரிசை பட்டியலில் இடம் பிடித்த மாணவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இதில் ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனங்களின் சென்னையின் உதவி மேலாளர்கள் மற்றும் முதல்வர்கள் ஆகியோர் கலந்துகொண்டு 300க்கு 300 மதிப்பெண் எடுத்த இரண்டு மாணவர்கள், மற்றும்

அகில இந்திய அளவில் நூற்றுக்கும் குறைவான தரவரிசை பட்டியலில் இடம் பிடித்து சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கு, பூங்கொத்து கொடுத்தும், பொன்னாடை அணிவித்தும் பாராட்டினர்.

ஜே.இ.இ தேர்வில் சாதனை படைத்த அனைத்து மாணவர்களும் சேர்ந்து கேக் வெட்டி தங்களது மகிழ்ச்சியை




கொண்டாடினர்.

இது குறித்து பள்ளியின் நிர்வாகி கூறுகையில் அண்மையில் தேசிய தேர்வு நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்ட ஜே.இ.இ தேர்வில் அகில இந்திய அளவில் நூற்றுக் கும் குறைவான தரவரிசை பட்டியலில் இடம் பிடித்து மீண்டும் தமிழகத்தில் உள்ள ஸ்ரீ சைதன்யா பள்ளி மாணவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

பூந்தமல்லி ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் இரண்டு மாணவர்கள் 300க்கு 300 மதிப்பெண்கள் எடுத்து சாதனை படைத்துள்ளனர். ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்கள் 99.9% சதவீதத்தில் இயற்பியல் மற்றும் வேதியியல் பாடப்பிரிவில் 100 சதவீதத்தில் மதிப்பெண் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

பூந்தமல்லி ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவன் பிரசன்னா அகில இந்திய அளவில் 41வது தர வரிசை பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளார். மேலும் பாட வாரியாக மொத்தம் ஏழு மாணவர்கள் 100% சதவிகித மதிப்பெண்ணும், அனைத்து பாடப்பிரிவுகளையும் சேர்த்து நான்கு மாணவர்கள் நித்தியபிரபு, பிரசன்னா, தனிஷா, சுதர்சனன் ஆகியோர் அகில இந்திய அளவில் 100க்கும் குறைவான தரவரிசையை பெற்றுள்ளனர்.

52 மாணவர்கள் 99% சதவிகிதத்திலும், 602 மாணவர்கள் நல்ல சதவீகிதத்தை பெற்று தேர்ச்சி அடைந்துள்ளனர்.

நமது ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களை கொண்டு ஜே.இ.இ தேர்வுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீ சைதன்யா பள்ளியின் இயக்குனர் திருமதி.சுஷ்மா போப்பனா மற்றும் , தமிழ்நாடு நிறுவன மேலாளர் திரு.ஹரிபாபு அவர்கள் கூறியதாவது எங்களது மாணவர்கள் ஆர்வத்துடனும் திறமையாகவும் படித்து ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவன குழுமத்திற்கு பெருமை சேர்த்துள்ளது மகிழ்ச்சியாக உள்ளது எனவும் மாணவர்களுக்கு பாரட்டுக்களையும் தெரிவித்தனர்..

## பெரியகுளம் அருகே கள்ளிப்பட்டியில் திராவிடர் கழகம் சார்பில் கலந்தாய்வு கூட்டம்





பெரியகுளம் ஏப்22

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கள்ளிப்பட்டியில் திராவிடர் கழகம் சார்பில் “இல்லம் தோறும் பெரியார் “ என்ற தலைப்பில் மாவட்ட துணை செயலாளர் முத்துசாமியின் சாமி ஸ்டிக்கர் மகிழகத்தில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தலைமை கழக ஒருங்கிணைப்பாளர் ஒரத்தநாடு குணசேகரன் தலைமை தாங்கினார். இந்த கலந்தாய்வு கூட்டத்தில் கள்ளிப்பட்டி கிராமத்தில் தெருமுனை கூட்டம் நடத்திடவும், பெரியார் குறித்த கருத்துகளை பெண்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளிடம் கொண்டு சேர்க்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் இந்நிகழ்வில்

பொதுக்குழு உறுப்பினர் அன்புக்கரசன், மாவட்ட தலைவர் சுருளிராஜ், மாவட்ட அமைப்பாளர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர் முத்துச்சாமி, ஒன்றிய செயலாளர் ஆதி தமிழன் ,திராவிடர் கழக நிர்வாகிகள் பெரியார் வளவன், கபிலன், பால்பாண்டி, முத்துச்செல்வம், முத்துலிங்கம், விஜய் முருகமுத்து, புஷ்பாராணி, முருகேஸ்வரி மற்றும் சமூக ஆர்வலர்கள் சுசி மணிவாசகம், இராவண வரதன், கவிஞர் அருண் அழகு ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியகுளம் நிர்வாகிகளாக பால்பாண்டி (கிளை தலைவர்) முத்துலிங்கம் (கிளை செயலாளர்) முத்துச்செல்வம் (கிளை பொருளாளர்) முருகேஸ்வரி (மகளிரணி தலைவர்) புஸ்பராணி ( மகளிரணி செயலாளர்) ஆகியோர் புதியதாக நியமிக்கப்பட்டனர்..

## பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் இரு இடங்களில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா

பெருங்களத்தூர் ஏப்.22

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு தண்ணீர் பந்தல் திறப்பு விழா பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.சேகர் தலைமையில் 55வது வார்டு மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி, பகுதி பொருளாளர் ஜே.மணி வண்ணன், வட்ட செயலாளர் பி.சுரேஷ், ஆர்.பரஞ்சோதி ஆகியோர் முன்னிலையில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஓம் பிரகாஷ், குமரன் ஆறுமுகம் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, 4வது மண்டல




குழு தலைவர் டி.காமராஜ், காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், ஆகியோர் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி நீர் மோர் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஏ.சத்தியபிரபு, மாநகர துணை அமைப்பாளர்கள் சா.ராஜேஷ், வி.கார்த்தி, வே.சிவசுப்பிரமணியம், பகுதி துணை அமைப்பாளர்கள் ஏ.குமரன், சுரேஷ், ஆர்.தேவ ராஜ், கேஎஸ்.விக்கி, யுவராஜ், தா.மணிகண்டன், அருண்குமார் மாநகர அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் டி.கே.கோட்டி, மாநகரப் பிரதி நிதி கே.சுந்தர், எஸ்.சிவக்குமார், ஆர்.லயன் ரேமான், எஸ்.எம். சோம சுந்தரம், அருண்குமார், ராகுல், அன்சாரி, சுபாஷ், ஆனந் தன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்..

## வேலூரில், டேர் டிவில்ஸ் மூன்றாம் ஆண்டு குடும்பத் திருவிழா




வேலூர், ஏப்.22

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் அடுத்த இடையன்சாத்து ராமலிங்க நகரில் குடும்ப விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் மொத்தம் 38 குடும்பங்கள் கலந்து கொண்டு ஆட்டம், பாட்டம், பட்டிமன்றம் என பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றது. இந்நிகழ்ச்சிகள் சிறப்பு அழைப்பாளராக வேலூர் கணியம்பாடி காவல் ஆய்வாளர் சுபா கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசுகளளை வழங்கினார். இதில் கணியம்பாடி ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன் ராஜ்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சாத்துமதுரை ராமச்சந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வெங்கட்ராமன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.




கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கடவூர் தாலுக்கா, மேலப் பகுதி ஊராட்சியில் உள்ள கீழ்ஆனகவுண்டன்பட்டி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலை கட்டிடத்தை கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சிவகாமசுந்தரி திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கடவூர் ஒன்றிய செயலாளர், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு புதிய கட்டிடத் திறப்பு விழாவை சிறப்பித்தனர்.

## வெப்ப அலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டம் அழைப்பு

சிவகங்கை ஏப்.22



சிவகங்கை மாவட்டம் வெப்ப அலை இன்றைய நாட்களில் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்திவரும் வேளையில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தமிழகம் முழுவதும் வெப்ப அலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன்னெடுக்கும் விதமாக மாநிலம் தழுவிய கருத்தரங்கு பெரம்பலூரில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி இது குறித்து கூறியதாவது. கடுமையான இந்த வெப்ப அலை தமிழகத்தையும் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிக வெப்பநிலை உயிருக்கு ஆபத்தானதாக இருக்கலாம். குறிப்பாக வயதான பெரியவர்கள் சிறு குழந்தைகள் கர்ப்பிணி பெண்கள் சர்க்கரை மற்றும் ரத்த கொதிப்பு போன்ற பாதிப்பு உள்ள மக்களுக்கு இந்த வெப்பநிலை அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. தீவிரமான மற்றும் நீடித்த வெப்ப அலைகள் மனித விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை பாதிக்கின்றது. மேலும் இந்த மாறிவரும் சூழ்நிலையினால் நீடித்து செழித்து வளர மனித தாவர மற்றும் விலங்கினங்களின் தகவமைப்பு திறன்களை பாதிப்படையச் செய்கின்றது. மனித வாழ்க்கைக்கு வெப்பநிலை வரம்பு 60% ஈரப்பதத்துடன் 20 30 டிகிரி செல்சியஸ் தேவைப்படுகிறது. இருப்பினும் தமிழகத்தின் பல பகுதிகளில் இந்த வரம்பு தொடர்ந்து உயர்ந்து காணப்படுகிறது. அதிக வெப்ப நிலை மற்றும் ஈரப்பதம் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது. ஆகவே மக்களுக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கீழ் கண்ட விழிப்புணர்வுகளையும் நடவடிக்கைகளையும் முன்வைக்கிறது.

பாதுகாப்பாக இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். ஏராளமான தண்ணீர் மற்றும் எலக்ட்ரோலைட் (ஒரு லிட்டர் தண்ணீர் 1/4 டீஸ்பூன் உப்பு 6 டீஸ்பூன் சர்க்கரை) நிறைந்த திரவங்களை குடிப்பதன் மூலம் நீர் சத்து குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பகல் நேரத்தில் வெப்பமான பகல் பொழுதில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வீட்டிற்குள் இருங்கள். இலகுரக தளர்வான பொருத்தமான வெண்மை நிற ஆடைகளை அணியுங்கள். பகல் நேரத்தில் கடுமையான உடல் உழைப்பு செயல்களை தவிர்க்கவும். குறிப்பாக பகல் பொழுதில் வயதான பெரியவர்கள் சிறு குழந்தைகள் கர்ப்பிணி பெண்கள் மற்றும் நோய் குறைபாடுகள் உள்ளவர்கள் பாதுகாப்பாகவும் நிழல் நிறைந்த இடத்தில் இருப்பதை உறுதி செய்யவும். தொடர்ந்து அதை உறுதிப்படுத்த வேண்டும். பகல் பொழுதில் வெயிலில் செல்லும் பொழுது கையில் குடையினை எடுத்துச் செல்லவும். தர்பூசணி வெள்ளரிக்காய் போன்ற நீரேற்றம் தரும் உணவுகளை உண்ணுங்கள். நிறுத்தப்பட்ட வாகனத்தில் குழந்தைகள் அல்லது செல்லப்பிராணிகளை ஒருபோதும் தனியாக விடாதீர்கள். குறைந்தபட்சம் SPF30 கொண்ட சன் ஸ்கிரீனை பயன்படுத்தவும். ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கு மீண்டும் தடவவும். இஸ்திரி பெட்டி முடி உலர்த்திகள் போன்ற வெப்பத்தை உருவாக்கும் மின் சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்கவும். சமையலை காலையில் மாலையில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் உடல் வெப்பநிலையை குறைக்க சிறு குளியல் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நாளைக்கு ஆண்கள் (2.6 லிட்டர் 3.7 லிட்டர்)பெண்கள் (2.1 லிட்டர் 2.7 லிட்டர்)மற்றும் குழந்தைகள் (1 லிட்டர் 2 லிட்டர்) கர்ப்பிணி பெண்கள் (2.3 லிட்டர் 3 லிட்டர்) தண்ணீர் அருந்த வேண்டும். வர்த்தக சங்க பிரதிநிதிகள் உள்ளூர் முக்கியஸ்தர்கள் தன்னார்வலர்கள் அனைவருக்கும் தண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். வெப்ப அலைகள் இன்றைய எதார்த்த உண்மையாக இருந்தாலும் சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு மூலம் அதன் தாக்கத்தை குறைக்க முடியும். ஒவ்வொரு தனி மனிதனும் தன்னை பாதுகாத்து மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும். வெப்பத்தை வெல்ல அறிவியலால் ஒன்றிணைவோம் என்று கேட்டுக் கொண்டார்.



கன்னியாகுமரி நகராட்சிக்கு உட்பட்ட 2 வது வார்டு மாதவபுரம் பகுதியில் நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ 9.80 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் அலங்கார தரைஓடு அமைக்கும் பணி நடந்து வருகிறது.இப்பணியை நகராட்சி தலைவர் திரு குமரி ஸ்டீபன் பார்வையிட்டார். உடன் 2 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் லிங்கேஸ்வரி மணிராஜா, ஊர் தலைவர் முத்துசாமி, இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் அன்பழகன், 2 வது வார்டு செயலாளர் மணி ராஜா, 8 வது வார்டு செயலாளர் ரூபின், நகர இளைஞரணி அமைப்பாளர் ஷ்யாம் ஆகியோர் உள்ளனர்.

## தாம்பரத்தில் ஒருங்கிணைந்த காஞ்சி-செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம்

தாம்பரம் ஏப்.22




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் ஒருங்கிணைந்த காஞ்சி மற்றும் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் மாவட்ட தலைவர் எஸ்

கே.ஜாஹிர் உசேன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது .

சிறப்பு அழைப்பாளராக மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப், தமுமுக மாநில செயலாளர் சிவகாசி முஸ்தபா, மாநில அமைப்பு செயலாளர் வழக்கறஞர் புழல் ஷேக் முஹம்மதுஅலி, காஞ்சி மாவட்ட தலைவர் ஜே.சலீம் கான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

செயற்குழு கூட்டத்தில் வக்ஃப் திருத்த சட்டத்தை கண்டித்து தமுமுக சார்பாக ஏப்ரல் 22 ஆம் தேதி நடைபெற உள்ள சென்னை ரிசர்வ் வங்கி முற்றுகை போராட்டத்திற்கு அதிக அளவில் மக்களை திரட்டி கொண்டு கலந்து கொள்வது என தீர்மானம் செய்யப்பட்டது.

தாம்பரம் கஸ்தூரிபாய் நகர் பகுதியில் மஸ்ஜிதே மதரஸா என்ற பெயரில் சுற்று வட்டார பகுதிகளான ஏழாவது தெரு, ஜீவா தெரு, அண்ணா தெரு, ஜாகிர் உசேன் தெரு, கல்யாணசுந்தரம் தெரு, கல்யாணசுந்தரம் ஒன்றாவது, மூன்றாவது குறுக்கு தெருக்கள், சாமியார் தோட்டம் ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தெருக்கள், வ.உ.சி தெரு மற்றும் வ.உ.சி ஒன்று முதல் ஆறாவது தெரு வரை, சிங்காரவேலன் தெரு, சுந்தரம் காலனி தெருக்கள் உள்ளிட்ட 24 தெருக்களில் வசிக்கும் இஸ்லாமிய மக்கள் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இந்தப் பகுதியில் முஸ்லிம்களுக்கான தொழுகை பள்ளி மதரஸா இருக்கக்கூடாது என்று தீய எண்ணத்துடன் திமுக பகுதி துணைச் செயலாளர் மற்றும் வட்ட பிரதிநிதிகள், பாரதிய ஜனதா மற்றும் இந்து முன்னணியுடன் கைகோர்த்துக்கொண்டு மதரசா அருகில் உள்ள டபுள் டாக்குமெண்ட் பிரச்சனைக்குரிய சட்டமன்ற உறுப்பினரின் பினாமி பெயரில் உள்ள இடத்தில் பிள்ளையார் சிலையை வைத்து அதற்கு திமுக நிர்வாகிகளே பாதுகாப்பாக நின்றது வருத்தம் அளிக்கிறது.

தாம்பரம் கோட்டாட்சியர் தலைமையில் பாங்கு என்னும் தொழுகைக்கான அழைப்பு கொடுக்கும் ஒலிபெருக்கியை கலட்ட சொல்லி ஜமாத்தார்களை நிர்ப்பந்தம் செய்து கழட்ட வைத்த செயல் திராவிட மாடல் மக்களாட்சி நடத்தி வரும் முதல்வரின் பெயரை சிறுபான்மை மக்களிடம் கெடுக்க திமுகவினரே மதவாத சக்திகளோடு இணைந்து செயல்படுவதை இந்த செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

மேலும் இவர்களின் ஈனச் செயலை தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்வதென இச்செயற்குழு தீர்மானம் நிறைவேற்றுகிறது. செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம் வரவேற்புரை ஆற்றினார்கள்.

மனிதநேய மக்கள் கட்சி மாநில இளைஞரணி செயலாளர் எஸ்.தமிம்அன்சாரி, மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் எம்.முஜிபுர் ரஹ்மான், மாநில பொருளாளர் ஏ.ஆஷிக் ஹமீது, செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொருளாளர் எம்.சபிபுல்லா, மு.மாவட்டச் செயலாளர் இப்ராஹிம், மமக காஞ்சி மாவட்ட செயலாளர் எம்.அமீத்கான், தமுமுக மாவட்டச் செயலாளர் முன்னா உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட துணை செயலாளர்கள், மாவட்ட அணி நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, நகர நிர்வாகிகள் பங்கேற்றனர் தாம்பரம் மத்திய பகுதி தலைவர் எம்.ஜலாலுதீன் நன்றியுரை ஆற்றினார்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 48வது வார்டுக்குட்பட்ட இடலாக்குடி அரசு தொடக்கப் பள்ளியில் ரூ8.70 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணியின நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். மேலும் பள்ளி கூடம் முழுவதும் ஆய்வு மேற்கொண்டார். உடன் மண்டல தலைவர் அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர்கள் .பியாஷா ஹாஜி பாபு, சொர்ணத்தாய் பகுதி செயலாளர் .துரை வட்ட செயலாளர் அன்சாரி .முருகன், இடலை சாகுல் செயற்குழு உறுப்பினர் சதாசிவம் அணி நிர்வாகி .ஹிதாயத், . ஹாஜி பாபு தி மு க நிர்வாகிகள் .முகம்மது இப்ராஹிம் ராஜதுரை, மக்கீன், சிவகுமார் பள்ளி தலைமை ஆசிரியர் சுஜா மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நடைபெறவுள்ள கலைஞரின் கைவினைத்திட்ட துவக்க விழா நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 95 திட்ட பயனாளிகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, வாழ்த்தி, வழியனுப்பி வைத்தார்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே தெப்பத்துபட்டியில் விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பற்றிய செயல் விளக்கம் நிகழ்ச்சி தோட்டக்கலை துறை துணை அலுவலர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டியில் உள்ள ஆர்விஎஸ் பத்மாவதி தோட்டக்கலை கல்லூரியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவிகள் சிவவைஷ்ணவி, ஸ்ரீநிதி, சுவாதி, தமிழரசி, வர்ஷா, விஜிதாமாரி, யாஸ்மின் ஆகியோர் கிராமபுற தங்கள் திட்டத்தின் கீழ் கலந்து கொண்டு செயல்முறைகள் பற்றி எடுத்துரைத்தனர்.

## தமிழ்நாடு அனைத்து மின் பணியாளர் முன்னேற்ற நல சங்கத்தின் சார்பில் ஒரு நாள் சோலார் பயிற்சி

செங்கல்பட்டு, ஏப்.22



செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு அனைத்து மிண் பணியாளர் முன்னேற்ற நல சங்கத்தின் சார்பில் சோலார் பயிற்சிகள் நடைபெறுகிறது விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் பதிவு செய்ய 500 ரூபாய் மட்டும் புகைப்படம் இரண்டு அனுப்பி பதிவு செய்ய இந்த போன் நம்பர் 90 944 64297 என்ற எண்ணிற்கு GPAY மூலம் பணம் செலுத்தி உறுதி செய்து கொள்ளலாம் ஒரு நபருக்கு 2000 ரூபாய் பயிற்சி வகுப்பு ஒரு நாள் மட்டும் ஞாயிற்றுக் கிழமையில் பயிற்சி நடைபெறும் இந்த சோலார் ட்ரைனிங் யாரு வேண்டுமானாலும் 18வயது நிரம்பி இருந்தால் போதும் தொழில் சொந்தமாக தொடங்க விருப்பமுள்ளவர்கள் சோலார் பற்றி எல்லாம் முன்னேற்றத்தை எடுத்துக் கொள்ள விதமாக வந்து பயிற்சி அளிக்கிறார்கள் பயிற்சியில் முடிந்தவுடன் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்..

## தோவாளை வட்டம் பகுதியில் அரசின் விவசாயிகள் அடையாள எண் பெருமுறையை ஆட்சியர் ஆய்வு

கன்னியாகுமரி ஏப்.22



கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் தாழக்குடி பேரூராட்சி பகுதியில் அரசின் விவசாயிகள் அடையாள எண் பெருமுறையை மாவட்ட ஆட்சியர் அழகுமீனா ஆய்வு செய்தார்கள்

வேளாண்மை துறை மூலம் வழங்கப்படும் விவசாயிகளின் அடையாள எண்ணை வருவாய் துறையினர் ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து உறுதி செய்கின்றனர் இந்த முறையை மாவட்ட ஆட்சியர் அழகுமீனா ஆய்வு மேற்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெங்கின்பிரபாகர்; தோவாளை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுரேஷ்;தோவாளை வட்டாட்சியர் கோலப்பன்; துணை வட்டாட்சியர் முருகன்; பூதப்பாண்டி வருவாய் ஆய்வாளர் ராணிநாகேஸ்வரி; தாழக்குடி கிராம நிர்வாக அலுவலர் பாத்திமா; தாழக்குடி பேரூராட்சி தலைவர் சிவக்குமார்; தாழக்குடி பேரூராட்சி முன்னாள் தலைவர் ரோகிணிஅய்யப்பன்;தாழக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் விஜயன்; தாழக்குடி பேரூராட்சி துணைத் தலைவர் ராஜா; கவுன்சிலர் இரவிபிள்ளை; மற்றும் விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர் இந்த நிகழ்ச்சியில் தாழக்குடியின் வீரகேரளப்பேஏரியின் பக்கச்சுவர் அனைத்தும் சேதமடைந்து உள்ளதை தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தாழக்குடி பேரூராட்சி முன்னாள் தலைவர் ரோகிணிஅய்யப்பன்; கோரிக்கை மனு வழங்கினார்.

மாலை தந்தி



## நீலகிரி திமுக சார்பில் பந்தல் அமைத்து நீர் மோர் வழங்கல்



நீலகிரி, ஏப்.22

நீலகிரி மாவட்டக் கழக செயலாளர் கே. எம். ராஜு தலைமையில் குன்னூர் மவுண்ட் ரோடு பகுதியில் அண்ணா சிலை அருகே மாவட்ட திமுக சார்பில் நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சியை தலைமை அரசு கொறடா கா. ராமச்சந்திரன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் க.செல்வம் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வினோத்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் மற்றும் தர்பூசணி பழங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்டத் துணை செயலாளர் லட்சுமி, ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் க. செல்வம் ,காளிதாசன், வழக்கறிஞர்கள், எஸ். பாபு, குயில் அரசன், சிவகுமார், முன்னாள் வர்த்தக அணி துணை அமைப்பாளர் முருககுமார், முன்னாள் விவசாய அணி துணை அமைப்பாளர் பாலன், முன்னாள் மாவட்ட சிறுபான்மை குழு உறுப்பினர் சிஜிழி பாருக், மீனவர் அணி துணை அமைப்பாளர் ஆட்டோ செல்வம், முன்னாள் ஒன்றிய துணை செயலாளர் அழகு சேகர், ஒன்றிய பிரதிநிதி செபாஸ்டியன் அமுல்ராஜ், நகர இலக்கிய அணி துணை அமைப்பாளர் மகாலிங்கம், டேன்ட்டி விஜயகுமார், தீனதயாளன், கேபிள் சாகய்.

இளைஞர் அணி :ரகு நாதன்,ஸ்ரீதர்,சாஜூ,நந்தகுமார், ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் பாபு,மகளிர் தொண்டரணி துனை அமைபாளர் யசோதா , சிஜூ ,மணிகண்டன், அருள், தினேஷ்,குமார், விக்னேஷ், உட்பட மாவட்ட, நகர, ஒன்றிய பேரூர்,கிளை கழக நிர்வாகிகள் ,பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## உலக பாரம்பரிய தின விழா ரயில் நிலையத்தில் கேக் வெட்டி கொண்டாட்டம்

நீலகிரி, ஏப்.22



நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உலகப் புகழ் பெற்ற நீலகிரி மலை ரயிலுக்கு யுனெஸ்கோ அந்தஸ்து கிடைத்துள்ளதால் உலக வரைபடத்தில் இடம் பெற்றுள்ளது. இதனால் அனைத்து நாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் மலை ரயிலில் பயணம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டி வரை மலை ரயில் இயக்கப்பட்டு 152 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில், உலக பாரம்பரிய தின விழா நேற்று குன்னூர் ரயில் நிலையத்தில் நடைபெற்றது ரயில்வே துறை சார்பில் நடத்தப்பட்ட விழாவில் மாணவ மாணவிகளுக்கு இதையே ஓவிய போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டதுடன், கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட மலை ரயிலில் சுற்றுலா பயணி கள் உற்சாகமாக பயணித்தனர்..

## பஞ்சமி நில மீட்பு கூட்டமைப்பு சார்பில் தேனி வட்டாட்சியர் அலுவலக முற்றுகை போராட்டம்



தேனி ஏப்22

தேனி மாவட்டம் தேனி புதிய பேருந்து நிலையம் அருகில் சர்வே எண் 196/1 கில் கட்டுப்பட்ட சுமார் 4 ஏக்கர் அளவிலான பஞ்சமர் நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பட்டியல் இன சமூக மக்களுக்கு வழங்கிட வேண்டுமாய் பஞ்சமி நில உரிமை மீட்பு கூட்டமைப்பு சார்பில் தேனி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் பகுஜன் சமாஜ் கட்சி தேனி மாவட்ட செயலாளர் ரெட் என்ற சின்னச்சாமி, புரட்சித்தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் வீரகுரு, ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ஈஸ்வரன், ஆதித்தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் சுரேஷ், தேசிய தமிழர் கட்சி மாநில தலைவர் மாரிசாமி, திராவிட தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் ராமசாமி, புரட்சிகர கட்சி மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, சாதி ஒழிப்பு முன்னணி மாவட்ட செயலாளர் இரும்பறை செந்தில், அம்பேத்கர் மக்கள் இயக்கம், அனைத்திந்திய சாதி ஒழிப்பு இயக்கம் உள்ளிட்ட அமைப்புகள் இப்போராட்டத்தில் பங்கேற்றன.

## மானாமதுரை ஊராட்சிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த கிராம மக்களுக்கு பட்டா வழங்கிய தமிழரசி எம்எல்ஏ



மானாமதுரை ஏப்.22

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு சுமார் 84 நபர்களுக்கு பட்டா வழங்க விழா நேற்று முன்தினம் மானாமதுரை தாலுகா அலுவலகத்தில் நடைபெற்றது. இவ்விழா வருவாய்த்துறை ஏற்பாட்டில் நடைபெற்றது. மானாமதுரை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு பட்டாவை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் வழங்கினார் நீண்ட நாட்களாக மக்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் நடவடிக்கை மேற்கொண்டார். இதில் மானாமதுரை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்த 84நபர்களுக்கு நேற்று பட்டா வழங்கப்பட்டது இந்த விழாவில் துணை வட்டாட்சியர் சரவணகுமார் ,வருவாய் ஆய்வாளர்கள் பாலுச்சாமி, முத்துவேணி ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை ராஜாமணி ,நகர செயலாளர் பொன்னுச்சாமி மாங்குளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முருகவள்ளிதேசிங்கு ராஜா மற்றும் நிர்வாகிகள் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம் குண்டடம் ஊராட்சி ஒன்றியம் வட சின்னாரி பாளையம் ஊராட்சி,வீணம்பாளையத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீணம்பாளையம் முதல் சுள்ளிபெருக்கிபாளையம் வரை சாலை அமைக்கும் பணியினை தமிழ்வளர்ச்சி மற்றூம் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் துவக்கிவைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ மலர்விழி உள்ளார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சரால் தலைமைச் செயலகத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 2025ம் ஆண்டிற்கான “சிறந்த திருநங்கை விருது” தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை பொன்னிக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத்திடம் அவ்விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன் உள்ளார்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் கைவினை திட்டத்தினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்து பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிய நிகழ்ச்சியின் நேரலையை திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த கைவினை கலைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பார்த்து பயன் பெறும் வகையில் மாவட்ட ஆட்சியரங்கத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.இந் நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், உதவி இயக்குநர் மாவட்ட தொழில்மையம் தெய்வமணி, முன்னோடி வங்கி மேலாளர் துர்கா பிரசாத், ஊராட்சிகள் உதவி இயக்குநர் மகேஷ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திருப்பூரில் திமுக சார்பில் மத்திய அரசை கண்டித்து கண்டன பொதுக்கூட்டம்!

திருப்பூர்22




திருப்பூர் மாநகரத்தில் மத்தியில் ஆளும் பாஜக அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையில்,நிதி பகிர்வு,இந்தித் திணிப்பு மற்றும் தொகுதி மறுசீரமைப்பில் பாரபட்சம் காட்டும் மத்திய அரசுக்கு எதிராக,திருப்பூர் வடக்கு மாவட்டம் மாநகரத்திற்கு உட்பட்ட 15 வேலம்பாளையம் பகுதி 9வது வார்டு, வடக்குமாவட்ட இளைஞரணி மற்றும் வடக்கு சட்டமன்றத் தொகுதி சார்பில் வெங்கமேடு பகுதியில் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மாநகர மேயர் ந. தினேஷ்குமார் முன்னிலையில் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ. தங்கராஜ் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் கழக மாணவரணி செயலாளர் ராஜீவ் காந்தி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர் நஸ்ரின் பானு, ரஜினிசெந்தில், மனோகர் பாபு, திருப்பூர் வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் க. நடராசன், மாநில பிரச்சார குழு உறுப்பினர் உமா மகேஸ்வரி, மாநகர அவைத் தலைவர் ஈஸ்வரமூர்த்தி, மாநகரத் துணைச் செயலாளர் ராமசாமி, 15வேலம்பாளையம் பகுதிகழக செயலாளர்

கொ.ராமதாஸ், கொங்குநகர் பகுதி செயலாளர் போலார் சம்பத், பாண்டியன் நகர் பகுதி கழகச் செயலாளர் ஜோதி. மாமன்ற உறுப்பினர்கள் வேலம்மாள் விவிஜி காந்தி, பிரேமலதா, கோட்டாபாலு, கோபால்சாமி, மாலதிகேபிள் ராஜ், அனுசியா தேவி, சண்முகசுந்தரம், வார்டு செயலாளர்கள் ஸ்ரீதர், குணராஜ். மகேந்திரன். மூர்த்தி.சுரேஷ். தெற்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் எம் எஸ் ஆர் ராஜ், விளையாட்டு மேம்பாட்டு அணி மாநகர அமைப்பாளர் பாலன். பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் ராம்குமார். எஸ் எஸ் ராஜ்.அசோக். சிவக்குமார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சி டி சி மணிகண்டன்.மாவட்ட மாநகர பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள்/ துணை அமைப்பாளர்கள்/ மாமன்ற உறுப்பினர்கள் /கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

## நேர்மையான இளைஞர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் லோக் ஆயுக்தா நீதிபதி டாக்டர் வீ. ராமராஜ் வலியுறுத்தல்

பழனி ஏப்.22



தமிழ்நாடு லோக் ஆயுக்தா நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள டாக்டர் வீ. ராமராஜ் அவர்களுக்கு பழனி எல்ஐசி முகவர்கள் சங்கத்தின் சார்பில் சங்கத்தின் பொருளாளர் பி சின்னராஜ் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை சமாளிக்க நேர்மையான இளைஞர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று ஏற்புரை வழங்கிய லோக் ஆயுக்தா நீதிபதி டாக்டர் வீ. ராமராஜ் வலியுறுத்தினார் அவர் பேசியதாவது.

கடந்த 1988 முதல் 4 ஆண்டுகள் பழனி எல்ஐசி பழனி கிளையில் முகவராக பணியாற்றினேன். அப்போது முகவர்களின் முன்னேற்றத்திற்காக எவ்வித சங்கமும் கிடையாது. அவர்களை ஒருங்கிணைத்து பழனி எல்ஐசி முகவர்கள் சங்கத்தை உருவாக்கி ஓராண்டு காலம் தலைவராக பணியாற்றினேன். 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பழனி எல்ஐசி முகவர்கள் சங்கம் 34 ஆண்டுகளாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எல்ஐசி முகவர்களின் ஒற்றுமையின் மூலம் அவர்களது உரிமைகள் வென்றெடுக்கப்பட்டிருக்கிறது என்று

நாட்டு மக்களிடையே ஒற்றுமை என்பது நாட்டை முன்னேற்றுவதற்கான, மனித வளர்ச்சிக்கான ஆயுதம். அதிகாரத்தை தவறுதலாக பயன்படுத்தும் மனிதர்களிடம் ஒற்றுமை இருக்கிறது. குற்ற செயல்களில் ஈடுபடும் கயவர்களிடம் ஒற்றுமை இருக்கிறது. லஞ்சம் வாங்கும் மனிதர்களிடமும் ஊழல்வாதிகளிடமும் ஒற்றுமை ஓங்கி நிற்கிறது. ஆனால் சமுதாயம் முன்னேற வேண்டும் என நினைப்பவர்களிடம், ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்று நினைப்பவர்களிடம், நேர்மையான மக்களிடம் ஒற்றுமை இல்லை ஏனெனில், நேர்மையாளர்களை ஒருங்கிணைக்க தன்னார்வ அமைப்புகள் சமூகத்தில் குறைவாக உள்ளன

விழாவில் பழனி வழக்கறிஞர்கள் சங்க முன்னாள் செயலாளர். வி. முத்துக்குமார், பொருளாளர் எஸ். ஜெயராமன், தமிழக ஆசிரியர் கூட்டணியின் முன்னாள் பொதுச் செயலாளர் சிவ கணபதி, அரிமா சங்க மாவட்ட தலைவர் டாக்டர் பி பி என் விமல் குமார், புள்ளியல் துறை இணை இயக்குனர் பி மயில்சாமி, போக்குவரத்து துறை மோட்டார் வாகன ஆய்வாளர் பி. ஈஸ்வரன், பூங்கா இதழ் பத்திரிகை ஆசிரியர் பொருளூர் செல்வா உள்ளிட்ட பலர் வாழ்த்து பேசினார்கள். முன்னதாக, பழனி எல்ஜசி முகவர்கள் சங்கத்தின் செயலாளர் எம். பாபு வரவேற்புரையும், இறுதியாக பழனி எல்ஜசி தலைவர் கிளப் உறுப்பினர் ராமசாமி நன்றியுரையும் ஆற்றினார்கள். நிகழ்வில் ஏராளமான எல்ஜசி முகவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161